بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

## நாயகக் காதலில் பூத்த

# காதல் காவியம்


தொகுத்தவர்:

MH. அப்துர் றஹ்மான்

(ஆஷிகே றஸூல்)

BJM வீதி, காத்தான்குடி – 05

0773912367


இலவச வெளியீடு


வெளியீடு :

நபீகளாரின் நேசர்கள்

(வாட்சப் குழுமம்)

## காதல் காவியங்கள்:


- முன்னுரை
- என்னுரை
- நாயகக் காதலில் பூத்த காதல் காவியம்
- பத்ர் களத்திலும் காதல் செய்த ஸவ்தா இப்னு கஸிய்யா றழியல்லாஹு அன்ஹு அவர்கள்
- நேசத்திலும் பேணுதல் கொண்ட அம்ருப்னுல் ஆஸ் றழியல்லாஹு அன்ஹு அவர்கள்
- கதவடியிலும் காத்திருப்பேன் நாயகமே
- என்னையும் அடிமையாக ஏற்றுக் கொள்ளுங்கள் நாயகமே யாறஸூலல்லாஹ்
- சொல்லப்படாத காதல்
- குளிராக்கும் தரிசனம்
- மதீனத்து மண்ணே எனக்கு மண்ணறையாகும்
- முத்தின் பிறப்பிடமே யாறஸூலல்லாஹ்
- என் குழந்தையும் கேடயம்தான்
- தங்களைக் காணாவிடின்?
- உனக்கோர் உபதேசம்
- அபூஜஹ்லும் – அபூபக்கரும்
- என்னை உவந்தவன் என்னுடன் இருப்பான்
- றிபாஈ நாயகத்திற்கு நபீகளாரின் பரிசு
- அன்புக்கு இதுதான் அடையாளம்
- யா ஹபீபே! யா றஸூலல்லாஹ்!
- ஒற்றை நிலா நீங்கள்தான்
- கண்ணீர் மழை நிச்சயம்!
- நான் தேடும் வரம்
- நன்றியுரை

## முன்னுரை :

எங்கும் நிறைந்திலங்கும் வல்லவனாம் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்தவனாகவும், பரிசுத்தத்திலும் பரிசுத்தமான உத்தமராம் நமது உயிரை விடவும் மேலான கண்மணி நாயகம் நபீ முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீதும், அவர்களின் பரிசுத்த குடும்பத்தார்கள், உற்ற தோழர்கள், அவர்களை அணுகளவும் பிசகாமல் நடந்த இறைநேசச் செல்வர்கள், ஷெய்குமார்கள், ஸாலிஹீன்கள் மற்றும் எமது ஷெய்குனா மிஸ்பாஹீ நாயகம் (மத்தல்லாஹு ழில்லஹுல் ஆலீ) அவர்கள்மீதும் என்றென்றும் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக. ஆமீன்!

## என்னுரை :

**அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மதுல்லாஹி வபறகாதுஹு**

அல்லாஹ் தஆலா தனது திருமறையிலே...

**"குல் பிபழ்லில்லாஹி வபிறஹ்மதிஹீ பபிதாலிக பல்யப்றஹு"**

**"அல்லாஹ்வுடைய சிறப்பையும் அருளையும் கொண்டு சந்தோசம் அடைந்து கொள்ளுங்கள்"** என்று கூறுகின்றான்.

எங்களுக்கு அல்லாஹுத் தஆலா வழங்கிய அருள்களில் , செல்வங்களில் மிகப் பெரிய அருள் நம் உயிரிலும் மேலான கண்மணி நாயகம் நபீ முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நபியாக, எங்களின் தலைவராக , றஸூலாக, முழு உலகத்தார்க்கும் றஹ்மத்தாக - அருளாக அனுப்பப்பட்டதுதான். இதனைவிட வேறு அருள் எதுவுமே இருக்க முடியாது.

ஆகவே, நம் உயிருக்கு உயிராகிய, உயிரை விடவும் மேலான கண்மணி நாயகம் நபீ முஹம்மத் முஸ்தபா (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நேசிப்பதும், அவர்களின் மீதான நேசத்தை வெளிப்படுத்துவதும் நம் ஒவ்வொருவரின்மீதும் கடமையான ஒன்றாகவும், அதுவே ஈருலகத்திலும் ஜெயம் பெறும் வழியாகவும் இருக்கிறது.

ஆனாலும் , அந்த கண்மணி நாயகம் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் புனிதமான புகழைப் பாடுவதற்கும், எழுதுவதற்கும் அதனை வாசிப்பதற்கும், அந்தப் புகழை பரப்புவதற்கும், அதற்காக உதவி செய்வதற்கும் நஸீப் - இறையருள் வேண்டும். எல்லோரும் கண்மணி நாயகத்தைப் புகழ முடியாது. அதற்கான மனோ பக்குவத்தை எல்லோருக்கும் அல்லாஹ் கொடுக்கவுமாட்டான்.

கருணையுள்ள றஹ்மான் அவனுடைய ஹபீப் கண்மணி நாயகம் நபீ முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் புகழ்வதற்கு அவன் விரும்பியவர்களை மட்டுமே தேர்ந்தெடுக்கின்றான். அந்த சீதேவிகளால் - இறை நேசர்களால் மட்டுமே அவனுடைய ஹபீபின் புகழைப் பாடவும், எழுதவும், வாசிக்கவும், பரப்பவும் அதற்காக உதவி செய்யவும் முடியும்.

"ஆஷிகே றஸூல்" றஸூலுடைய காதலர்களுக்கென்றே ஒரு தனி உலகம் இருக்கிறது. அந்த உலகம் மிகவும் அழகானது. காதலால் நிறைந்தது. அங்கு ஆண் பெண்ணென்ற பாகுபாடில்லை. அங்கு இருப்பவர்கள் கண்மணி நாயகத்தைப் பற்றி மட்டுமே பேசுவார்கள். அந்த கண்மணிக்காகவே ஒருவருக்கொருவர் உதவியும் செய்வார்கள். ஆம், அந்த உலகத்தில் என்னையும் நுழைய வைத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அல்ஹம்துலில்லாஹ்!

எம் கண்மணி நாயகத்தின் உதய தினத்தை சிறப்பிக்க வேண்டும், அந்த கண்மணி நாயகத்தின் மேலான புகழைப் பரப்ப வேண்டும், நபீகளாரின் நேசத்தை மக்கள் உள்ளங்களில் விதைக்க வேண்டும் என்ற எனது செயல்பாடுகளில் மிகவும் முக்கியமான ஒன்றாகத்தான் கடந்த நான்கு வருடங்களைப் போன்றே இவ்வருடமும் எனது ஐந்தாவது நூல் வெளியீடாக கண்மணி நபீகளாரின் சிறப்புக்கள் - கீர்த்திகள் மற்றும் அவர்களின் புகழ்கள் பற்றிய **"நாயகக் காதலில் பூத்த காதல் காவியம்"** எனும் இந்நூல் வெளியீடாகி இருக்கிறது.

அல்லாஹ்வின் உதவியைக் கொண்டும், கண்மணி நபீகளாரின் அருளைக் கொண்டும், எமது ஷெய்குனா மிஸ்பாஹீ நாயகம் (மத்தல்லாஹு ழில்லஹுல் ஆலீ) அன்னவர்களின் நல்லாசி கொண்டும் குர்ஆன், ஹதீஸ் கிரந்தங்களிலும், இமாம்கள், வலீமார்களின் நூல்களிலும், சங்கைக்குரிய உலமாஉகளின் உரைகளில் இருந்தும் பெறப்பட்ட கண்மணி நபீகளாரின்மீது ஸஹாபாக்கள், இமாம்கள், வலீமார்கள், ஷெய்குமார்கள் வைத்திருந்த காதலைத் தொகுத்து அழகிய சிறு நூலாக இதனை வடிவமைத்திருப்பதுடன் இந்நூல்களின் மூல ஆசிரியர்களுக்கும், மொழி பெயர்த்தவர்களுக்கும், பதிப்பித்தவர்களுக்கும் எனது நன்றியினை காணிக்கையாக்குகிறேன். மேலும் அவர்களின் மேலான அருளை வேண்டியவனாகவும் இந்நூலை நுகருபவர்க்கு துஆ செய்தவனாகவும் இருக்கிறேன்.

இந்நூலில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டிருப்பின் அவற்றை சுட்டிக் காட்டி அதனை திருத்திக் கொள்ள வழியமைக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

**- தொகுத்தோன் -**

# நாயகக் காதலில் பூத்த
# காதல் காவியம்

"வியப்பின் விழிகள் வியந்தன
அருமை நாயகம் முஹம்மது
முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
அவர்களின் முபாறக்கான வாழ்வை
நேரடியாக கண்டோர், கேட்டோர், பதிவு செய்தோர்
புகழ்பாக்களை தொடுத்தோர்
கவிமழையில் நனைந்தோர்
ஆஸீக்கே றஸூல்மார்கள்மீதும்
என்றென்றும் இறைவனின் பேரருட்காட்சி
பொழியட்டுமாக. ஆமீன்!"

## பத்ர் களத்திலும் காதல் செய்த ஸவ்தா இப்னு கஸிய்யா றழியல்லாஹு அன்ஹு அவர்கள்:

ஆம், பத்ர் போரின்போது கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸ்லிம்களின் படையை அணிவகுத்து சரி செய்வதற்காக ஒரு குச்சியை எடுத்து, வரிசையில் சரியாக நிற்காத ஸவ்தா இப்னு கஸிய்யா றழியல்லாஹு அன்ஹு அவர்களின் வயிற்றில் குச்சியால் இலேசாகக் குத்தி சரியாக நிற்கும்படி பணித்தார்கள்.

அப்போது ஸவ்தா இப்னு கஸிய்யா றழியல்லாஹு அன்ஹு அவர்கள், இறைத் தூதரே! எனக்கு நீங்கள் துன்பம் தந்து விட்டீர்கள். எனவே, நான் அதற்காக பரிகாரம் காண நாடுகிறேன் என்றார்கள்.

உடனே கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது வயிற்றைக் காட்டி பரிகாரம் தேடிக் கொள்ளுங்கள் என்றார்கள். உடனே ஸவ்தா இப்னு கஸிய்யா றழியல்லாஹு அன்ஹு அவர்கள், கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கட்டியணைத்து அவர்களின் வயிற்றில் முத்தமிட்டார்கள். இதைக் கண்ட நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இப்படி செய்ய உம்மைத் தூண்டியது எது? என்று வினவினார்கள்.

அதற்கு யாறஸூலல்லாஹ்! இன்றைய நிலையை நீங்கள் அறிவீர்கள். எனவே உங்களின் தோலுடன் இணைந்து பிரிவதையே நான் விரும்பினேன் என்று ஸவ்தா இப்னு கஸிய்யா றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

கண்மணியான நாயகம் றஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸவ்தா இப்னு கஸிய்யா றழியல்லாஹு அன்ஹு அவர்களுக்காக துஆ செய்தார்கள். **(ஆதாரம் : தபறானீ)**

பத்ர் களத்தில் முஸ்லிம் அணியினர் வெற்றி அல்லது வீரமரணம் என்ற இரண்டில் ஒன்றை எதிர்பார்த்தவர்களாக நின்ற நேரத்தில், ஒரு வேளை மரணம் எம்மை தழுவும் நிலை வரலாம். எனவே, நம்முடைய இறப்பிற்கு முன்பாக நம் உயிரிலும் மேலான இறைத்தூதர் அவர்களின் திரு மேனியை ஆரத்தழுவி எம் இறுதி ஆசையை நிறைவேற்றிக் கொள்வோம் என்று ஸவ்தா இப்னு கஸிய்யா றழியல்லாஹு அன்ஹு அவர்கள் எண்ணி, நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஆரத்தழுவி முத்தமிடுகிறார்கள் எனில், தங்களின் உயிர் இந்த பத்ர் களத்தில் போவதைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. தங்களின் உயிரிலும் மேலான நபீயை பிரிவது குறித்தே அங்கே சிந்தித்தார்கள் என்பதைப் பார்க்கும் போது அத்தியாக சீலர்களின் வாழ்க்கை நம்மை மெய் சிலிர்க்கச் செய்கிறது. ஸுப்ஹானல்லாஹ்!

**ஸல்லல்லாஹு அலா முஹம்மத்**
**ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்**

## நேசத்திலும் பேறுதல் கொண்ட அம்றுப்னுல் ஆஸ் றழியல்லாஹு அன்ஹு அவர்கள்:

“மாநபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைவிட நேசத்திற்கும் பாசத்திற்கும், கண்ணியத்திற்குரியவர் என் பார்வையில் யாருமே இல்லை. அன்னாரின்மீது நான் கொண்டிருந்த அளப்பெரும் மரியாதை, நேசத்தின் காரணமாக அவர்களை முழுமையாகக் கண் கொண்டு காண்பதற்குக் கூட எனக்கு துணிவு பிறக்கவில்லை”.

“என்னிடம் அல்லாஹ்வின் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தோற்றத்தைப் பற்றி வர்ணிக்குமாறு கூறப்பட்டால் என்னால் வர்ணிக்க இயலாது. ஏனெனில், நான் ஒருபோதும் அல்லாஹ்வின் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முழுமையாகப் பார்த்ததில்லை. இந்நிலையில் நான் இறந்திருப்பேனேயானால் சுவனவாசிகளில் ஒருவனாக நான் ஆகியிருப்பேன் என ஆதரவு வைக்கிறேன்.”

இதனை யார் சொன்னார்கள்? வாருங்கள் அந்த அழகிய ஹதீஸை விரிவாகப் பார்ப்போம்.

இப்னு ஷிமாஸா மஹ்ரீ றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள் : நாங்கள் அம்ருப்னுல் ஆஸ் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் மரணத் தருவாயில் அவர்களின் அருகே அமர்ந்திருந்தோம். அவர்களோ சுவற்றின் பக்கம் தங்களின் முகத்தைத் திருப்பியவர்களாகத் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார்கள்.

அவர்களின் மகனார் அப்துல்லாஹ் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் 'என்னருமைத் தந்தையே! அல்லாஹ்வின் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உயிரோடிருக்கும் காலத்தில், தங்களுக்கு இன்னின்ன நற்பேறுகளை நீங்கள் அடைவீர்கள் என்று சோபனம் சொல்லி இருக்கின்றார்களே? தங்களுக்கு கிடைக்கவிருக்கும் பாக்கியங்கள் குறித்து சுபச் செய்தி நல்கியிருக்கின்றார்களே? அப்படி இருக்க தாங்கள் ஏன் அழுகின்றீர்கள்?' என்று ஆறுதல் கூறிக் கொண்டிருந்தார்கள்.

இதைக் கேட்டதும் எங்களின் பக்கம் முகத்தைத் திருப்பிய அம்ருப்னுல் ஆஸ் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் : 'நான் மறுமைக்காகத் தயார் செய்து வைத்திருப்பதில் மிக உயர்ந்தது "ஏகனாம் அல்லாஹ்வுக்கு வேறாக ஒன்றுமில்லை. முஹம்மது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் றஸூல் என்ற சாட்சியம்" தான்.

நான் என் வாழ்நாளில் மூன்று வகையான காலங்களைக் கடந்து வந்துள்ளேன். ஒரு காலம் இருந்தது, அந்தக் காலத்தில் என்னைவிட மாநபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்மீது வெறுப்புக் கொண்டவன் வேறு யாரும் இருந்திருக்கமாட்டான். சந்தர்ப்பம் கிடைத்தால், அவர்களை எப்படியாவது கொலை செய்துவிட வேண்டுமென்ற தீர்மானத்தோடு வாழ்ந்து கொண்டிருந்தேன். இதுதான் என் வாழ்நாளில் மிகக் கெட்ட காலமாகும். (அல்லாஹ் என்னைக் காப்பாற்றினான்) இந்நிலையிலே நான் இறந்து போயிருந்தால் நிச்சயமாக நரகவாசியாகி யிருப்பேன்.

பின்பு இஸ்லாம்தான் சத்திய மார்க்கம் என்பதை அல்லாஹ் என் உள்ளத்தில் உதிக்கச் செய்தான். நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து, 'தங்களின் திருக் கரங்களை நீட்டுங்கள். தங்களிடம் உடன்படிக்கை (பைஅத்) செய்ய வேண்டுமென வேண்டினேன். நபீயவர்கள் தங்களின் புனித கரங்களை நீட்டினார்கள். நான் என் கையை விலக்கிக் கொண்டேன். "அம்ரே! ஏன் கையை விலக்கிக் கொண்டீர்." என என்னிடம் மாநபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வினவினார்கள். 'தங்களிடம் நான் சில நிபந்தனைகளைக் கோர விரும்புகிறேன்' என்றேன்.

என்ன நிபந்தனை? என்று மாநபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னிடம் கேட்டார்கள். அதற்கு நான் 'என்னுடைய பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட வேண்டும்' என்று கூறினேன்.

அதற்கு அண்ணல் நபிகளார் "அம்ரே! இறை நிராகரிப்பின்போது நிகழ்ந்த அனைத்துப் பாவங்களையும் இஸ்லாம் தகர்த்து விடுகின்றது. ஹிஜ்ரத் (அல்லாஹ்விற்காக இடம் பெயர்வது) அதற்கு முன் உண்டான பாவங்களை அழித்து விடுகின்றது. ஹஜ் அதற்கு முன் உண்டான பாவங்களைப் போக்கி விடுகின்றது என்பது உமக்குத் தெரியாதா?" என்று கூறினார்கள். பின்னர் நான் அல்லாஹ்வின் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கரங்களில் உடன்படிக்கை செய்தேன்.

என்னுடைய இந்த இரண்டாவது காலம் எத்துனை சிறப்பானதெனில், மாநபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைவிட நேசத்திற்கும், பாசத்திற்கும், கண்ணியத்திற்குரியவர் என் பார்வையில் யாருமே இல்லை. அன்னாரின்மீது நான் கொண்டிருந்த அளப்பரிய மரியாதை, நேசத்தின் காரணமாக அவர்களை முழுமையாகக் கண் கொண்டு காண்பதற்குக் கூட எனக்கு துணிவு பிறக்கவில்லை.

என்னிடம் அல்லாஹ்வின் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தோற்றத்தைப் பற்றி வருணிக்குமாறு கூறப்பட்டால் என்னால் வருணிக்க இயலாது. ஏனெனில், நான் ஒரு போதும் அல்லாஹ்வின் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முழுமையாகப் பார்த்ததில்லை. இந்நிலையில் நான் இறந்திருப்பேனேயானால் சுவனவாசிகளில் ஒருவனாக நான் ஆகியிருப்பேன் என ஆதரவு வைக்கிறேன்.

பிறகு நான் சில பொருட்களுக்கு சொந்தக்காரனாக ஆனேன். இவைகளுக்கு மத்தியில் நான் எவ்வாறு வாழ்ந்தேன் என்று உறுதியிட்டுச் சொல்ல முடியாது. இது என் வாழ்நாளில் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் மூன்றாவது காலமாகும். நான் மரணித்துவிட்டால், ஒப்பாரி வைத்து கூச்சலிடும் பெண்களை என் ஜனாஸாவைப் பின்தொடர அனுமதிக்காதீர்கள். (அறியாமைக் காலத்தில் செய்தது போன்று) என் ஜனாஸாவுடன் நெருப்பைச் சுமந்து வர வேண்டாம்.

என்னை அடக்கம் செய்ததும் கப்ரில் நன்றாக மண்ணைப் போட்டு மூடி விடுங்கள். (அடக்கம் செய்தபின்) உங்களைக் கொண்டு நான் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்லப் போகிறேன் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக என் மண்ணறையின் அருகே, ஒட்டகத்தை அறுத்து அதன் இறைச்சியைப் பங்கிடும் அளவிலான நேரம் நில்லுங்கள்" என்று அம்ருப்னுல் ஆஸ் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள். **(ஆதாரம் : முஸ்லிம்)**

**"உங்கள் புகழ்மாலை தொடுக்க**
**என் கரம் அருகதையற்றது என்று**
**தெரிந்தும் தொடுக்கிறேன்...**
**எங் கரங்களில் படிந்த பாவங்கள்**
**கரைந்தோடுவதற்காக!**
**எங்கள் கண்மணியே யாறஸூலல்லாஹ்!!**

## கதவடியிலும் காத்திருப்பேன் நாயகமே:

எம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள்மீது ஸெய்யிதுனா அபூபக்கர் ஸித்தீக் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கொண்டிருந்த அன்பை இவ்வளவுதான் என்று யாராலும் அளவிட முடியாது.

ஒரு முறை கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது ஹபீபான ஸெய்யிதுனா அபூபக்கர் ஸித்தீக் றழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் "ஒருநாள் இரவில் நாம் பிரயாணம் செய்ய வேண்டி வரும். அந்நேரம் உங்களை அழைத்துப் போக வருவேன்" என்றார்கள்.

சில நாட்களுக்குப்பின், அல்லாஹ்விடமிருந்து ஹிஜ்ரத்தை மேற்கொள்ளும் படி கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டது.

ஒரு நடுநிசி வேளையிலே ஸெய்யிதுனா அபூபக்கர் ஸித்தீக் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டுவதற்காகத் தங்களின் முபாறக்கான கரங்களை கதவின்மீது வைக்கும் முன்பே கதவு திறந்து கொண்டது. கூடவே ஸெய்யிதுனா அபூபக்கர் ஸித்தீக் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் பிரயாணத்திற்குத் தேவையான ஆயத்தங்களுடன் தயாராக வாசலிலே நின்றார்கள்.

இதனைக் கண்ணுற்ற பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆச்சரியப்பட்டு, "அபூபக்கரே! நான் இப்போது வருவது உங்களுக்கு எப்படித் தெரியும்? வீட்டு வாசலிலே தயாராக நிற்கிறீரே? என்று கேட்டபோது ஸெய்யிதுனா அபூபக்கர் ஸித்தீக் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள் :

'யா றஸூலல்லாஹ்! தாங்கள் எப்போது ஓரிரவில் என்னை அழைத்துப் போக வருகிறேன் என்று கூறினீர்களோ, அன்று முதல் இன்று வரை நான் இவ்விடத்தில் இவ்வாறுதான் காத்திருக்கிறேன்.

ஏனென்றால், அல்லாஹ்வின் ஹபீபான தங்களின் வருகைக்காக நாங்கள்தான் காத்திருக்க வேண்டும். மாறாக அல்லாஹ்வின் றஸுலே உங்களை எனது வீட்டு வாசலில் காத்திருக்க வைப்பதா? அப்பெரும் குற்றத்திற்கு நான் ஆளாகாமல் இருக்கவே இவ்வாறு செய்தேன் என்றார்கள். இவ்வளவு அளவு கடந்த நேசத்தையும், கண்ணியத்தையும் இனிய மதீனத்து வேந்தர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்மீது வைத்திருந்ததால்தான் ஈமானிலே உயர்ந்த அந்தஸ்த்தைப் பெற்றார்கள் ஸெய்யிதுனா அபூபக்கர் ஸித்தீக் றழியல்லாஹு அன்ஹு அவர்கள்.

## என்னையும் அடிமையாக ஏற்றுக் கொள்ளுங்கள் நாயகமே யாறஸுலல்லாஹ் :

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களால் "எனக்குப் பின் ஒரு நபீ வருவதாக இருந்தால் அது ஸெய்யிதுனா உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களாகத்தான் இருக்கும்" என்று போற்றப்பட்ட ஸெய்யிதுனா உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்தில்...

ஒருமுறை அவர்களின் மகனார் அப்துல்லாஹ் இப்னு உமர் றழியல்லாஹு அவர்களும் நபீமணி பேரர் இமாம் ஹுஸைன் றழியல்லாஹு அன்ஹு அவர்களும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். பேச்சினிடையே இமாம் ஹுஸைன் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் இப்னு உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து, உங்கள் தந்தை என் பாட்டனார் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அடிமைதானே என்று கூற இப்னு உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் வேதனையோடு தன் தந்தையிடம் இதனைக் கூறிவிட்டார்கள்.

இதைக் கேட்ட ஸெய்யிதுனா உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள், தன் மகனையும் இமாம் ஹுஸைன் றழியல்லாஹு அன்ஹு அவர்களையும் கையில் பிடித்தவர்களாக கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் றவ்ழாவின் முன் நின்று, 'யா றஸுலல்லாஹ்! என்னை தங்களுடைய அடிமை என்று தங்களின் அருமைப் பேரர் கூறிவிட்டார்கள். இதற்கு சாட்சியாக அவர்களும் இங்கு இருக்கிறார்கள். தாங்கள் அதை ஏற்றுக் கொள்ளுங்கள் யாறஸுலல்லாஹ்!

தாங்கள் என்னை அடிமையாக ஏற்றுக் கொண்டு விட்டால் நான் ஈருலகிலும் மேன்மையடைந்து விடுவேனே யா றஸுலல்லாஹ்' என்று கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகக் கொட்ட தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார்கள்.

சுவர்க்கத்தைக் கொண்டு சுபச்செய்தி பெற்ற ஸெய்யிதுனா உமர் றழியல்லாஹுஅன்ஹு அவர்களின் இச் செயலாகிறது கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்மீதும் அவர்களின் சந்ததிகளின் மீதும் காட்டப்பட வேண்டிய அன்புக்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

இதே போன்று ஸஹாபாக்கள் மட்டுமல்லாது பின்னால் வந்த அனைத்து இஸ்லாமிய பெரியார்களும் வலீமார்களும் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்மீது அளவு கடந்த அன்பையும், கண்ணியத்தையும் கொண்டிருந்தார்கள். இதனாலேயே அவர்களின் ஈமான் பரிபூரணமடைந்தது. அவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்த்தையும் பெற்றுக் கொடுத்தது.

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : "யார் என்னை உவர்ந்தாரோ அவர் என்னுடன் சுவர்க்கத்தில் இருப்பார்" என்று. ஆகவே நாம் அல்லாஹ்வின் நேசத்தையும், திருப்தியையும் பெற்ற நல்லடியார்களாக வாழ்ந்திட வேண்டுமாயின் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களை எமது உயிரிலும் மேலாக நேசிக்க வேண்டும். அதிகமதிகம் ஸலவாத்தை ஓதி அன்னவர்களின் அன்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதன் மூலமாக நம் அனைவரையும் அல்லாஹ் பரிபூரணமடைந்த முஃமீன்களாக ஆக்கியருள்வானாக. ஆமீன்!

**"நினைத்தவாரு நித்தமும்**
**பெருமையோடு மடமையாக**
**வாழ்ந்தேனே நாயகமே! யாறஸூலல்லாஹ்!!**

**தங்களது நேசர்கள் குலாமதில்**
**இப்பாவிக்கும் கருணையெனும்**
**அருட்பார்வையினை பார்த்துவிட்டீர்களே!**

**ஏந்தலே தாங்கள் வீற்றிருக்கும் இடமறியாது**
**எனது அறக்க மதியுடன்**
**அலைந்தேனே அவனியில்...**

**ஏழைமுகம் பார்க்க எம்மானே**
**கனவிலும் நினைவிலும்**
**தங்களின் சுந்தர வதனம் கண்டிட**
**எனக்கும் உங்கள் றஹ்மத்தை**
**பொழிந்திடுங்கள் மாபதியே நாயகமே!!**

## சொல்லப்படாத காதல்:

"நபீயே! நாயகமே! உங்களோடு இருக்கும் ஒருகன நேரம் இந்த உலகம் கிடைப்பதைவிடச் சிறந்தது" எனக் கூறினார்கள் அப்துல்லாஹ் இப்னு றவாஹா றழியல்லாஹு அன்ஹு அவர்கள்.

அப்துல்லாஹ் இப்னு றவாஹா றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹ்வின் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்மீது அளவு கடந்த அன்பு கொண்டிருந்த நபித் தோழர்களில் ஒருவராவார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஃத்தா யுத்தத்திற்கான படைப்பிரிவை அனுப்பும்போது, வழக்கத்திற்கு மாறாக தளபதிகளாக மூன்று நபித்தோழர்களின் பெயர்களை அறிவித்தார்கள்.

ஆரம்பமாக ஸைத் இப்னு ஹாரிதா றழியல்லாஹு அன்ஹு அவர்கள் படையை வழிநடாத்துவார்கள். அவர்கள் காயமுற்றால் ஜஃபர் இப்னு அபீதாலிப் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் படையை வழிநடாத்துவார்கள். அவரும் காயமுற்றால் அப்துல்லாஹ் இப்னு றவாஹா றழியல்லாஹு அன்ஹு அவர்கள் படையை வழிநடாத்துவார்கள். அவரும் காயமுற்றால் இஸ்லாமியப் படைவீரர்கள் அடுத்த தளபதியை தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும் என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்கூறி படையை வழியனுப்பி வைத்தார்கள்.

படை புறப்பட்டுச் சென்ற நாள் வியாழன் மாலையாக இருந்தது. விடிந்தால் வெள்ளிக்கிழமை. அப்துல்லாஹ் இப்னு றவாஹா றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹ்வின் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தளபதிகளை நியமிக்கும் அந்த விதத்தைப் பார்த்தே நிச்சயம் நாம் முஃத்தா யுத்தத்தில் ஷஹீதாகி விடுவோம் என்று உறுதியாக நம்பினார்கள்.

ஆகையால், எப்படியும் நாம் ஷஹீதாகி விடுவோம். அல்லாஹ்வின் றஸூலை இனிமேலும் எம்மால் பார்க்க முடியாது. கடைசியாக பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பின்நின்று ஜும்ஆ தொழுகையை முடித்து விட்டுச் செல்வோம் என்று மதீனாவிலேயே இருந்து விட்டார்கள்.

ஜும்ஆ தொழுகைக்கான பாங்கு சொல்லப்படவே, நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம்மைப் பார்த்துவிடாதவாறு ஒரு ஓரமான இடத்தில் அமர்ந்து கொண்டார்கள்.

தொழுகை முடிந்து வெளியே செல்லும்போது, பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அப்துல்லாஹ் இப்னு ரவாஹா ரழியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து விட்டார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை அழைத்து "நேற்றே நான் யுத்தத்திற்கான படைப்பிரிவை அனுப்பி வைத்தேனே? ஏன் நீங்களும் அவர்களுடன் செல்லாமல் இருந்துவிட்டீர்கள்? உம்மைச் செல்ல விடாமல் தடுத்த காரியம் எது?" என்று வினவினார்கள்.

அப்போது அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், 'அல்லாஹ்வின் ரஸூலே! இறுதியாக உங்களுக்குப் பின்னால் நின்று ஜும்ஆ தொழுகையைத் தொழுதிடும் ஆவல்தான் என்னைத் தாமதப்படுத்தி விட்டது. இதோ யுத்த களத்தை நோக்கித்தான் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். விரைவாகச் சென்று வழியில் படைப் பிரிவில் சேர்ந்து கொள்வேன்' என்று பதில் கூறினார்கள்.

அதற்கு பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அப்துல்லாஹ்வே! பூமி முழுவதையும் நீர் செலவழித்தாலும்கூட, முன்னால் சென்று விட்ட படைப்பிரிவினர் அடைந்த நன்மைகளை உம்மால் அடைந்து கொள்ள முடியாதே?!" என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பரிவோடு கூறினார்கள்.

அப்போது அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், 'அல்லாஹ்வின் ரஸூலே, உங்களுடன் நான் இருக்கும் ஒரு காலைப் பொழுதோ, அல்லது மாலைப் பொழுதோ இந்த உலகமும், உலகின் அனைத்துச் செல்வங்களும் எனக்கு கிடைப்பதைவிட மேலானதாக நான் கருதுகின்றேன்' என்று கூறி, விடை பெற்று யுத்த களம் நோக்கி விரைந்தார்கள். **(ஆதாரம் : முஸ்னத் அஹ்மத்)**

**"ஓயாமல் கிறுக்கிக் கொண்டிருக்கிறேன்**
**நம் காதல் கவிதைகளை**
**நாயகமே!**

**ஒவ்வொரு கவிதை முடிவிலும்**
**புதிதாய் ஒருகாதல் தொடங்குகிறது**
**உங்கள்மீது யாறஸூலல்லாஹ்!"**

## குளிராக்கும் தரிசனம்:

அருமை நாயகம் கண்மணி முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு நெருங்கிப் பழகி வாழும் பெரும் பேற்றைப் பெற்ற ஸஹாபாக்கள் மனம் திறந்து சொல்கிறார்கள்:

நாங்கள் வெயிற் காலங்களில் வேலை செய்து கொண்டிருப்போம். எங்களுக்கு களைப்பு ஏற்படுமானால் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தொழும் பள்ளியாம் மஸ்ஜிதுன் நபவியின் பக்கமாக வந்து, அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எப்போது வருவார்களோ என எதிர்பார்த்துக் காத்திருப்போம். அவர்கள் வந்து விட்டார்களென நாங்கள் அறிந்து கொண்டதுமே எங்கள் கண்கள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொன்மேனியின் திருதரிசனம் பெற்ற மறுகனமே எங்களின் களைப்புகளெல்லாம் நீங்கி, எங்கள் முகத்தில் தெளிவும் சரீரத்தில் சுறுசுறுப்பும் உண்டாகிவிடும் என்கிறார்கள்.

களைத்து தாகித்துப்போன ஒருவன் ஆலமரத்தடியில் நிழலுக்காகத் தங்கி களைப்பாறுவதை விடவும் மேலாக சுவைமிக்க குளிர்பானம் குடித்து மகிழ்வதுபோல் அருமை நாயகம் முஸதபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முபாறக்கான தரிசனம் அமைந்திருக்கும் என்பார்கள். ஸுப்ஹானல்லாஹ்!

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

## மதீனத்து மண்ணே எனக்கு மண்ணறையாகும்:

மதீனத்து மன்னர் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்மீது அளவு கடந்த அன்பும் மரியாதையும் வைத்திருந்தவர்களில் இமாம் மாலிக் றழியல்லாஹு அன்ஹு அவர்களும் ஒருவர் என்றால் அது மிகையாகாது. இவர்களின் மத்ஹப் உலகெங்கும் பின்பற்றப்படுகிறது.

இவர்கள் மதீனாவின் தெருக்களில் வாகனத்தின்மீது ஏறிச் சென்றது கிடையாது. பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்திலிருந்த மதீனாவின் வீடுகளை இவர்கள் காண்பார்களேயானால் இது எம்பெருமானின் முபாறக்கான அருட்பார்வை விழுந்த கட்டிடமல்லவா இவை? என்று கூறி, அவற்றை ஓடிச் சென்று முத்தமிடுவார்கள்.

அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் துயில் கொள்ளும் புனித மதீனத்து மண்ணிலேதான் தாம் நல்லடக்கமாக வேண்டும் என்பதற்காக வேற்றூர்களுக்கு அவர்கள் செல்வதே கிடையாது. கலீபாவின் அழைப்பை ஏற்று பக்தாதுக்குக்கூட செல்ல மறுப்பார்கள்.

மக்காவிற்குக்கூட ஹஜ் கடமையை நிறைவேற்ற வாழ்வில் ஒருமுறைதான் சென்றார்கள். காரணம் தாம் அங்கு சென்றிருக்கும்போது தமக்கு இறப்பு அண்மித்துவிடின் தாம் மதீனாவில் துயில் கொள்ளும் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பக்கத்தில் உள்ள ஜன்னதுல் பகீஇல் அடங்கப் பெற்று மறுமையில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் உயிர்த்தெழும் பேற்றினை இழந்துவிட நேரிடுமே என்ற அச்சத்திலே மதீனாவை விட்டும் மற்ற ஊர்களுக்குப் போவதைத் தவிர்த்தார்கள் இமாம் மாலிக் றழியல்லாஹு அன்ஹு அவர்கள்.

## முத்தின் பிறப்பிடமே யாறஸூலல்லாஹ்:

ஆஷிகே றஸூல் கவியரசர் இமாம் முஹம்மது ஷர்புத்தீன் பூஸீரீ றழியல்லாஹு அன்ஹு அவர்கள் யாத்த புனிதமிகு புர்தஹ் ஷரீபஹ்விற்காக தமது புரவலராம் அருமை நாயகம் கண்மணி முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே வியந்து பாராட்டி அங்கீகாரம் அளித்ததோடு மட்டுமல்லாமல், வாடிய நோயையும் வாடிய மனதின் வாட்டத்தையும் போக்கி சந்தன மேனியில் போர்த்திய போர்வையையும் போர்த்தி கௌரவித்தார்கள்.

இப்படியானதொரு சிறப்பினைத் தன்னகத்தே கொண்டுள்ள தங்களின் புனித புர்தஹ் ஷரீபஹ்விலே...

**"கஅன்னமல் லு:.லுஉல் மக்னூனு பீ ஸதபின்**
**மின் ம:.தினை மன்திகின் மின்ஹு வமுப் தஸிமின்"**

**"பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முபாறக்கான வதனத்தில் பிரகாசிக்கும் பற்கள் முத்துக்களை விடவும் பிரகாசமானதாயிருக்கும். காரணம் முத்துக்கள் கடலில் விளைந்த சிப்பியினுள் வளர்ந்தவை. ஆனால், அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வதனத்தில் ஜொலிக்கும் பற்களெனும் முத்துக்களோ கண்மணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புன்முறுவல் எனும் பொன்மொழிக் கடலின் சிப்பியினுள் விளைந்த முத்துக்களாயிருக்கும்"** என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பேரழகைக் கவியாக வடித்திருக்கிறார்கள்.

## என் குழந்தையும் கேடயம்தான்:

ஆம்! அது உஹுத் யுத்தம்!
பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களின் உற்ற தோழர்களும் யுத்தத்திற்காகச் சென்றிருந்தனர்.

வீதியில் ஒருவர் ஓடி வருகிறார். கைக் குழந்தையுடன் நின்றிருந்த பெண்ணைக் கண்டு "உமது கணவர் புனிதப் போரில் ஷஹீதாகிவிட்டார்" என்று சொல்கிறார். அதற்கு அப்பெண் 'அல்லாஹ்வின் ரஸூல் நலமாக இருக்கிறார்களா?' என்று கேட்கிறார்.

மீண்டுமொருவர் வந்து "உங்கள் சகோதரரும் மகனும் ஷஹீதாகி விட்டனர்" என்கிறார். அதைக் கேட்டும் அப்பெண் கவலை முகத்தில் தோய்ந்தவாறு 'அல்லாஹ்வின் ரஸூல் நலமாக இருக்கிறார்களா? எப்படியிருக்கிறார்கள்?' என்றே வினவினார்கள். என்னே விந்தை! இரத்த பாசத்தை விடவும் நபீகளின் மீதான நேசம் அப்பெண்ணின் உதிரத்தில் கலந்து இதயத்தில் மேலோங்கி விட்டது.

உடன் தனது கைக் குழந்தையுடன் யுத்த களம் சென்ற அப்பெண்மணி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் தனது மழலையைக் கொடுத்தார்கள்.

"யாது நேர்ந்ததோ உமக்கு? இந்நேரத்தில் தங்களின் குழந்தையை என்னிடம் தருகிறீர்? நானென் செய்வேன்?" என்று புன்முறுவலுடம் கேட்டார்கள் எம்மான் நபீகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

'இல்லை நாயகமே! தாங்களோ போர் களத்தில் நிற்கிறீர்கள். தங்களை நோக்கி வரும் அம்புகளையும் ஈட்டிகளையும் தடுக்கும் கேடயமாக எனது குழந்தையை வைத்துக் கொள்ளுங்கள் நாயகமே' என்று சொன்னார் அப்பெண்மணி! நபீ தோழியின் சொற்கேட்டு மனம் உருகினார் கருணையின் தாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். ஸுப்ஹானல்லாஹ்!

அனைத்தை விடவும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிக்க வேண்டும் என்று கூறக் கூடிய மக்கள் மத்தியிலே இப்படியும் ஓர் வீரப் பெண்மணி என்றால் அதற்குத் தகுதியானவர்கள் நபீகளாரின் உற்ற தோழர்கள் அன்றி இவ்வையகத்தில் யார்தான் உள்ளனர்?

## தங்களைக் காணாவிடின்?:

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கனவிலே மாத்திரம் கண்டு கொண்டு அவர்களின் அழகின் காதலிலே வாழ்ந்து கொண்டிருக்கக் கூடியதோர் சமூகத்தின் மத்தியிலே, கண்மணியான நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பேரழகை விழிப்பிலும் கண்டு கொண்டு உரையாடிக் கொண்டிருக்கும் ஓர் உன்னதமான சமூகம் உண்டென்றால் அது இறை நெருக்கத்தைப் பெற்ற வலீமார்களான இறை நேசர்களின் சமூகம் ஒன்றே என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

அப்படிப்பட்ட உன்னதான அந்தஸ்த்தை அடைந்து கொண்ட மாபெரும் தவசீலர், ஷாதுலிய்யஹ் தரீகாவின் ஸ்தாபகர் அஸ்ஸெய்யித் அபுல் ஹஸன் அலீ அஷ்ஷாதுலீ றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள் :

**" லவ்ஹுஜிப அன்னீ றஸூலுல்லாஹி தர்பத ஐன்**
**மா குன்து மின் ஜூம்லதில் இஸ்லாமி ஸும்றத ஸைன்"**

**"கண்மூடி விழிப்பதற்குள்ளான நேரத்தில்கூட நான் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் காண்பதை விட்டும் திரையிடப்பட்டால், இஸ்லாமிய கூட்டத்தவர்களில் நின்றும் நான் உள்ளவனில்லை என்று தீர்ப்புச் செய்து கொண்டேன்"** என்று கூறுகின்றார்கள்.

அப்படியானால், ஷாதுலீ இமாமவர்கள் ஒவ்வொரு நொடி நேரமும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேரடியாகக் கண்டு கொண்டே வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும், இந்நிலையிலேயே இறை நேசர்களான அவ்லியாக்களும் வாழக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதும் தெட்டத் தெளிவாகின்றது.

அஸ்ஸெய்யித் அபுல் ஹஸன் அலீ அஷ்ஷாதுலீ றழியல்லாஹு அன்ஹு அவர்களின் மேற்கூறிய சொல்லைக் கொண்டு எங்களின் நிலைகளை நாம் சிந்தித்தோமேயானால், இஸ்லாமிய போர்வையிலே வாழக்கூடிய மிகக் கொடிய பாவிகளாக நாமே இருக்கின்றோம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மேலான கருணையுள்ள றஹ்மான்! இப்படியான கொடிய பாவங்களை விட்டும் எம்மைப் பாதுகாத்து, கண்மணியான நாயகத்தைக் கனவிலும் நனவிலும் காணும் பாக்கியத்தை நல்குவானாக. ஆமீன்!

## உனக்கோர் உபதேசம் :

ஷெய்குனா ஷாஹ் வலிய்யுல்லாஹ் றழியல்லாஹுு அன்ஹுு அவர்கள் செய்த இறுதி உபதேசம்.

சகோதரனே! உமக்கு நான் வஸிய்யத் - இறுதி உபதேசம் செய்கிறேன். தினமும் பெருமானார் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களின் திருக் கோலத்தை மனக் கண்ணில் உருவகப்படுத்திக் கொண்டே இரு.

இவ்வாறு உருவகப்படுத்துவதால் சில சிரமங்களை எதிர் நோக்க வேண்டி வந்தாலும் சரி. உமது ஆன்மா றஸூல் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களின் ஆன்மாவுடன் மிக விரைவில் இணைந்துவிடும். பின் றஸூல் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களின் ஆன்மா உன் முன்னால் பிரகாசித்துக் கொண்டேயிருக்கும். பின் பெருமானார் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களை நேரில் பார்ப்பீர். அவர்களுடன் உரையாடவும் செய்வீர். பெருமானார் உமக்கு விடை கொடுப்பார்கள் என்று பெருமானார் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களைக் காணக் கூடிய வழியினைக் காட்டித் தருகின்றார்கள்.

**(ஆதாரம் : அல்மதாரிஜூந் நுபுவ்வஹ்)**

## அபூஜஹ்லும் – அபூபக்கரும்:

**" உலகமே வெறுத்தாலும்,**
**உறவுகள் எதிர்த்தாலும்,**
**உறுதியாய் உரைக்கின்றேன் நாயகமே!**

**உயிரின் பந்தமும் நீங்களே!**
**என் உள்ளத்தின் சொந்தமும் நீங்களே!**
**நாயகமே, யாறஸூலல்லாஹ்!!**

கண்மணியான நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் ஈமான் கொண்ட முஸ்லிம்களுக்கும் சொல்லொண்ணா தொல்லைகள் தந்த அபூஜஹ்ல், பெருமானார் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம்அவர்கள் ஹறம் ஷரீபின் முற்றத்திலே தோழர்களுடன் இருப்பதைக் கண்டு கோபக்கண்ணுடன் வந்தவன் நாயகத்தைப் பார்த்து "நஊதுபில்லாஹ்" சொன்னான். ஹாஸிம் கோத்திரத்திலேயே அசிங்கமான முகத்தை இன்றைக்குத்தான் நான் பார்க்கிறேன்' என்றான்.

சமயோசிதமாக என்றைக்கும் உணர்ச்சிக்கு ஆட்படாத அருமை நாயகம் அவனைப் பார்த்து "நீ சொல்வது சரிதான்" என்றார்கள்.

சிறிது நேரத்தின்பின் ஆருயிர்த் தோழர் அபூபக்கர் ஸித்தீக் றழியல்லாஹு அன்ஹு நாயகத்தின் சமூகத்திற்கு வந்து "யா றஸூலல்லாஹ், தங்களின் முபாறக்கான முகத்திற்கு ஈடு இணையான அப்படியொரு ஜொலிக்கும் முகத்தைவிட இந்த உலகத்திலே நான் பார்த்ததில்லை" என்றார்கள்.

அபூபக்கர் ஸித்தீக் றழியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து அருமை நாயகம் ' நீங்கள் சொல்வதும் சரிதான்' என்றார்கள். கூடியிருந்த தோழர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. 'நாயகமே! அபூஜஹ்ல் வந்து தங்களை அவமரியாதையாகப் பேசியதற்கும், அபூபக்கர் ஸித்தீக் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்ணியத்தோடு அழைத்ததற்கும் இரண்டு பேருக்குமே சரிதான் என்றீர்களே? எங்களுக்கு விளங்கவில்லையே? ' என்று தோழர்கள் கேட்டார்கள்.

அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் 'அல்லாஹ் என்னை கண்ணாடியாக படைத்திருக்கின்றான். அபூஜஹ்ல் வந்தவன், அவன் முகத்தை என்னில் பார்த்தான். அவனுக்கு அசிங்கமாகத் தெரிந்தது. அபூபக்கர் ஸித்தீக் அல்லாஹ்வுடைய றஸூலாகப் பார்த்தார்கள். அழகாகத் தெரிந்தேன்' என்றார்கள்.

அபூஜஹ்ல் அருமை நாயகத்தை அல்லாஹ்வின் றஸூலாகப் பார்க்காமல் அப்துல்லாஹ்வின் மகனாக சராசரி மனிதனாகப் பார்த்தான். பெருமானாரின் மகிமையைப் புரியாமல் "கண்டதே காட்சி கொண்டதே கோலமென" மிருகக் குணத்திற்கு ஆட்பட்டான். அபூபக்கர் ஸித்தீக் றழியல்லாஹு அன்ஹு அவர்களோ அல்லாஹ்வின் றஸூலாகப் பார்த்தார்கள். அவர்களில் இருந்து வெளியாகும் ஒவ்வோர் அசைவிலும் இறைவனின் தன்மைகளை உணர்ந்து யாரும் அடைய முடியாத இலக்கை இறைவனிடம் பெற்றார்கள்.

## என்னை உவந்தவன் என்னுடன் இருப்பான்:

**" முழுமையடைகிறது உங்கள் அன்பால்...**
**வெறுமையாய்க் கிடந்த என் வாழ்க்கை!**
**நாயகமே யாறஸூலல்லாஹ்!**

**தங்களை உவப்பதால்தானே**
**என் வாழ்வும் மணக்கிறது**
**கண்மணியே யா ஹபீபல்லாஹ்!! "**

அனஸ் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் செய்தி புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒருமுறை கண்மணி நாயகம் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு ஸஹாபி 'இறுதி நாள் எப்போது வரும்?' என்று கேட்டார்கள். அதற்குப் பெருமானார் "அதற்காக எதனை சேமித்து வைத்திருக்கிறீர்?" எனக் கேட்டார்கள்.

அதற்கு அந்த ஸஹாபி ' அல்லாஹ்வின்மீதும் அவனின் தூதராகிய தங்களின் மீதும் வைத்துள்ள அன்பைத் தவிர' என்றார்கள். அதற்குப் பெருமானார் "நீர் யார்மீது அன்பு வைத்துள்ளீரோ அவருடன் இருப்பீர்" என்று கூறினார்கள்.

அதற்கு ஸஹாபி 'ஆதலால் நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும், அபூபக்கர் ஸித்தீக் றழியல்லாஹு அன்ஹு மற்றும் உமர் றழியல்லாஹு அன்ஹு ஆகியோரையும் நேசிக்கின்றேன். எனது செயல் அவர்களுடன் ஒப்பிடுமளவு இல்லாவிடினும் என் அன்பின்மூலமாக நான் அவர்களுடன் நாளை மறுமையில் இருப்பேன் என்பதை நம்புகிறேன்' என்றார்கள்.

## றிபாஈ நாயகத்திற்கு நபீகளாரின் பரிசு:

சுல்தானுல் ஆரிபீன் ஸெய்யித் அஹ்மத் கபீருர் றிபாஈ றழியல்லாஹு அன்ஹு அவர்கள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்மீது ஒப்பில்லா அன்பு வைத்திருந்தார்கள்.

ஹிஜ்றி 555ல் தமது 48வது வயதில் கறுத்த கம்பளிப் போர்வையொன்றை போர்த்திக் கொண்டு தன்னந்தனியாக திருமதீனா நகர் நோக்கிப் புறப்பட்டார்கள்.

மதீனா நகருக்குள் நுழைந்ததுமே "யாறஸூலல்லாஹ், யா றஸூலல்லாஹ்" என்று கூறியவர்களாக பெருமானாரின் றவ்ழா ஷரீபுக்குள் நுழைந்த அவர்கள், வெகு நேரமாக மௌனமாக நின்றிருந்தார்கள். அங்கே எதிர்பாராமல் பெரும் கூட்டமும் கூடியிருந்தனர். ஏராளமான வலீமார்களும் அங்கே கூடியிருந்தனர். கௌதுல் அஃளம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானீ, ஷெய்கு இத்தீ இப்னு முஸாஃபிக், ஷெய்கு அப்துர் றஸ்ஸாக் ஹுஸைனீ றழியல்லாஹு அன்ஹும் உட்பட அங்கே 9900 வலீமார்கள் இருந்ததாக "நூருல் அஹ்மதிய்யா" எனும் நூலில் திட்டமாகக் கூறியிருப்பதாக ருமூஜுல் புகாரா என்ற உர்து நூலில் காணப்படுகிறது.

காதலில் ஒருமித்த மனதுடன் பெருமானாரின் றவ்ழாவை பார்த்தவாறு நின்றிருந்த ஆண்டகை உரத்த குரலில், "அஸ்ஸலாமு அலைக்கும் யா ஜத்தீ" எனது பாட்டனாரே தங்கள்மீது சலாம் உண்டாவதாக என்றதும் "வஅலைக்கு முஸ்ஸலாம் யா வலதீ" எனதருமைப் பேரரே தங்கள்மீதும் சலாம் உண்டாவதாக என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பதிலுரைத்தார்கள். இதனை அங்கே கூடியிருந்த அனைவரும் கேட்டனர்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பதிலைக் கேட்டு உணர்ச்சிவசப்பட்ட ஆண்டகையின் தூய கோரிக்கைகள் கவிதைத் துளிகளாய் வடிய ஆரம்பித்தன.

**" நான் தூரத்தே இருக்கும்போது**
**தங்கள் கப்ரை முத்தமிடுவதற்காக**
**எனதுயிரை அனுப்பிக் கொண்டிருந்தேன்**
**அந்த உயிர் உடலோடு இப்போது**
**தங்கள் சமூகம் வந்திருக்கிறது**
**தங்கள் வலது கரத்தை நீட்டுங்கள்**
**என் உதடுகள் அதை முத்தமிட்டுக் கொள்ளட்டும்"**

இந்தக் கவிதை அமுதின் கடைசிச் சொல் அவர்களது நாவிலிருந்து கழன்று விழுந்ததும், மின்னலொன்று பளீரிட்டு நிலைத்தாற் போன்று பெருமானாரின் கப்ர் ஷரீபில் இருந்து அவர்களின் புனிதமிகு கரம் வெளிப்பட்டதைக் கண்ட ஆண்டகையவர்கள் "யா றஸூலல்லாஹ்" எனக் கத்திக் கொண்டே ஓடினார்கள். வானமும் வையமும் அடைந்திடாத பெருவதற்கரிய பாக்கியத்தை நினைத்து பூரித்துக் கொண்டே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருக்கரத்தை ஆசைதீர முத்தமிட்டுக் கண்ணீர் சொரிந்தார்கள்.

## அன்புக்கு இதுதான் அடையாளம்:

அல்லாமா காழீ இயாள் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றார்கள் : "ஒரு மனிதன் ஒரு பொருளின்மீது நேசம் கொள்வதாயின், மற்றெல்லாவற்றை விடவும் அதன்மீது அன்பு கொண்டே தீருவான். இதுவே அந்த அன்பின் உண்மையான அடையாளமாகும். அவ்வாறு இல்லையாயின் அந்த அன்பு வெறும் போலியான அன்பேதான்.

ஸஹ்ல் இப்னு அப்துல்லாஹ் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றார்கள் : "அல்லாஹ்வின்மீது நேசம் இருப்பதற்கடையாளம் குர்ஆனை நேசிப்பதாகும். குர்ஆனின்மீது நேசம் வைப்பதின் அடையாளம் பெருமானாரை நேசிப்பதாகும்.

பெருமானாரின்மீது நேசம் வைப்பதன் அடையாளமாகிறது அவர்களின் வாழ்வை நேசிப்பதும், சுவாசிப்பதும் பின்பற்றுவதுமாகும் என்று கூறுகின்றார்கள். **(ஆதாரம் : குர்துபீ)**

எனவே, கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்மீது நாம் உண்மையான அன்பு கொள்வதாயின், அவர்களை நம் உயிரை விடவும் மேலாக நேசிக்க வேண்டும்.

அதன் வெளிப்பாடாக எம் வாழ்க்கையின் ஒவ்வொரு விசயத்திலும் நாம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முழுக்க முழுக்கப் பின்பற்றுபவர்களாக இருக்க வேண்டும். அவர்களின் சொற்படி நடக்க வேண்டும். அவர்களின் முன்மாதிரிகளை அடியொட்டி வாழ வேண்டும். எதனை விட்டும் எம்மைத் தடுத்தார்களோ அதனை முற்றாக விட்டுவிட வேண்டும்.

இன்பத்திலும் துன்பத்திலும், வறுமையிலும் செல்வத்திலும், வாழ்வின் எல்லா நிலைகளிலும் அண்ணலாரையே பின்பற்றி நடந்து கொள்ள வேண்டும். சுருங்கக் கூறின் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்வை சுவாசிக்கக் கூடியவர்களாக நாம் மாறிப்போய்விட வேண்டும்.

எப்படி சுவாசம் நின்று போனால் நம் உடலை விட்டும் உயிர் நீங்கி விடுமோ, அது போன்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வார்த்தையும் வாழ்க்கையும் நம்மிடம் இல்லாது போனால் நம் உயிரே நின்று விடுவதைப் போன்று நாம் கருத வேண்டும்.

யா அல்லாஹ்! அண்ணல் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்மீது நேசம் கொள்கின்ற மேன்மக்களாக எங்களை ஆக்கியருள் புரிவாயாக. அந்த நேசத்தின் வெளிப்பாடாக அவர்களின் வாழ்வை எல்லா நிலைகளிலும் பின்பற்றுகின்ற உறுதிமிக்கவர்களாக எங்களை ஆக்கியருள் புரிவாயாக.

யா அல்லாஹ்! உன் ஹபீப் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஷபாஅத்துக்கு உரித்துடையவர்களாக ஆக்கி வைப்பாயாக. ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

## யா ஹபீபே! யா றஸூலல்லாஹ்! :

" யா றஸூலல்லாஹ்,
தங்களை யாரென்று விளங்காமல்
தங்களின் தாத்தினை விளங்காமல்
பிதற்றிவரும் முனாபிக்குகளான
மடையர்களுக்கு மத்தியில்...

எங்களை
தென்றலைவிட இனிமையாக
திங்களை விடக் குளுமையாக
உங்கள் புகழைப்பாட வைத்த
றப்புல் ஆலமீனுக்கே
எல்லாப் புகழும்
அல்ஹம்துலில்லாஹ்!

மறுமையிலென் ஏட்டினை
வலது கையில் கொடுத்தாலும்
எத்தனை நன்மைகள் - அதில்
இருக்கிறது என்பதை நான்
பார்க்கப் போவதில்லை நாயகமே!

யா றஸூலல்லாஹ்!
அது நன்மையே இல்லா
வெற்றுக் காகிதமாய்
இருந்தாலும் பரவாயில்லை
எங்கள் கண்மணியே
யா ஹபீபே! யா றஸூலல்லாஹ்!!

மனிதன் ஒரேயொரு நன்மைக்காக
தன் காதல் மனைவியை
பாசமிகு பிள்ளையை
மதிப்புமிகு பெற்றோரை
கெஞ்சிக் கொண்டு
எதிர்பார்த்துக் கொண்டு
ஒரேயொரு நன்மை கிடைத்தால்
நான் போய்விடுவேன் சுவர்க்கம் என்று
கதறிக் கொண்டிருக்கும்போது
நாங்கள் கவலையற்றிருப்போமே
உங்கள் காலடியில்!
அதுபோதும் எம் ரட்சகரே!!

எங்கள் அனைத்து அமல்களின்
அனைத்து நன்மைகளை
தங்கள் காலடியில் காணிக்கையாய்
சமர்ப்பித்துவிட்டோமே
இப்பூவுலகில்!
யா ஹபீபே! யா றஸூலல்லாஹ்!!

ஆதலால்... எங்களுக்கு
எங்கள் கண்மணி நாயகத்தின்
குடையின்கீழ்
நிழல்தங்கி கொண்டிருக்கும் பாக்கியம்
ஒன்றேபோதும்!
யா ஹபீபே! யா றஸூலல்லாஹ்!!

ஆம் நானும் காதலிக்கிறேன்
என் அன்னையைவிட
என் தந்தையைவிட
ஏனென் மனைவியைவிடவும்
எம் பெருமானாரை
காதலிக்கிறேன்
காதலிப்பேன்
காதலித்துக் கொண்டே இருப்பேன்!

நாட்கள் வரும்
என்னுயிருக்கு உயிரான என்
உத்தமரை காணும் நாட்கள்...
கனவில் கிடைத்தாலும்
அந்த நொடியே
யா அல்லாஹ் நீ நாடினால்...
மரணம் எனக்கு வேண்டும்
என் காதலரைக் கண்ட
முகத்தோடு நான்
யாரையும் காணாமல் இருக்க!

**ஸல்லல்லாஹு அலா முஹம்மத்**
**ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்**

## ஒற்றை நிலா நீங்கள்தான்:

அழகின் எல்லை எதுவரை என்று
நான் ஆராய்ந்த பொழுதுதான்
உங்களை முதலில் கண்டேன்
யாறஸூலல்லாஹ்!

அழகு என்னும் அளவுகோலின்
ஆரம்பமும் சரி! உச்சமும் சரி!
நீங்கள் மட்டும்தான் நாயகமே!
யாறஸூலல்லாஹ்!

பசுமை சோலைத் தேடும்
பாலைவன மணல்களாய்
உங்களது பதிலைத் தேடும்
என் காதல் ஆசைகள்! யாறஸூலல்லாஹ்!

கானல் நீராய் வர வேண்டாம்
மலைச் சாரலாய் வந்து
விடுங்கள் யாறஸூலல்லாஹ்!
என் தாகம் தனித்து விடுங்கள்
அன்பே யா றஸூலல்லாஹ்!

வானத்தில் ஆயிரம் ஆயிரமாய்
நட்சத்திரங்கள் பூத்திருந்தாலும்
நட்சத்திரங்களின் ராஜாவாக
இருக்கும் ஒற்றை நிலா
நீங்கள்தான் யாறஸூலல்லாஹ்!

தேய்பிறை என்பதையே அறியாத
உங்கள் அழகைக் கண்டு
தினம் வியக்கத்தான் செய்கிறேன்
யா றஸூலல்லாஹ்!

என் இதயம் துடிக்க வேண்டும்
அதுவும் உங்களுக்காக மட்டும்
யா றஸூலல்லாஹ்!

உங்கள் இதயத்தில் இடம்
ஒன்றைக் கொடுத்து விடுங்கள்
நாயகமே யா றஸூலல்லாஹ்!!

## கண்ணீர் மழை நிச்சயம்!

உங்களை நினைக்கும்
ஒவ்வொரு நொடியும்...
இனிமையான தருணம் நாயகமே!

தூக்கத்தில் கண் விழித்தாலும்
உங்கள் நினைவு போவதில்லை
நாயகமே! யா றஸூலல்லாஹ்!

தனிமை பழகிப் போனது
தனிமையில் உங்கள் நினைவு
இதமாகிப் போனது நாயகமே!

தூக்கம் தொலைத்தேன் பல இரவுகளில்...
கனவிலும் நீங்கள் வருவதால்
நாயகமே! யா றஸூலல்லாஹ்!

நீங்கள் வரும் நாட்களுக்காக - என்
கண்கள் பூத்து விட்டது நாயகமே!
உங்களைக் காணும் அந்த நொடி
என் கண்களில் கண்ணீர் மழை நிச்சயம்!
பேச இயலா ஊமையாய்....
போவேனோ நாயகமே! யா றஸூலல்லாஹ்!

அனுதினமும் ஆயிரம்
ஆசைகளோடு நான் - உங்களோடு
வாழும் வாழ்க்கை போதும்
நாயகமே! யாறஸூலல்லாஹ்!!

## நான் தேடும் வரம்:

என் நாயகமே!
நீங்கள்தான் என் உலகமே!

உங்கள் காலடியில் நாள்தோறும்
நான் இருந்தால் போதும்
அதை தவிர வேறேது வேண்டும்...?

உங்களைப் போன்று யாருமில்லை!
உங்களைத்தவிர வேறேதும்
தேவை இல்லை நாயகமே!

சொந்தங்கள் எல்லாம்...
எனைத் தூக்கி எறிந்தாலும்
உங்கள் மனதின் ஓரத்தில்
நான் இருக்கும் - அந்த
நிம்மதி போதும் நாயகமே!

உங்கள் பக்கம் நான்
இருப்பதைவிட...
ஏதுவேறு சந்தோசம் நாயகமே!

உங்கள் மடியில் நான்
தலைவைத்து தூங்கும் நிமிடம்போல்...
ஒரு சுகம் எங்கே உணர
முடிகிறது நாயகமே!

எவ்வளவு சோகங்கள் வந்தாலும்...
உங்கள் பக்கம் நான் சாயும்போது...
எல்லாமே மறந்து போகும்!
எத்தனை காலம் எடுத்தாலும் - நான்
உங்களைப் பிரியாமல் இருக்க
வரம் ஒன்று வேண்டும் நாயகமே!

என்றும் உங்களுடனே மாமதினாவில்...
நான் வாழ்ந்திட வேண்டும்!
என ஆசைப்படும் உங்கள்
அடிமை இவன்
அப்துர் றஹ்மான்!!

**ஸல்லல்லாஹு அலா முஹம்மத்**
**யா றப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்**

## நன்றியுரை:

எல்லாப் புகழும் அகிலங்களின் இறைவன் ஒருவனுக்கே. அல்ஹம்துலில்லாஹ்!

இறையருளும் ஈடேற்றமும் இறையோனின் முதலொளி, அகிலத்தின் அருட்கொடை அண்ணலெம் பெருமான் றஸூலே கரீம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்மீதும், அவர்களின் பரிசுத்தமிகு குடும்பத்தார்கள், தோழர்கள், அவர்களின் வாழ்வியலை அடியொட்டி வாழ்கின்ற அனைவர்மீதும் உண்டாவதாக.

இந்நூலைத் தொகுக்கும் அளவிற்கு எனக்கு நல்லாசிகள் வழங்கி, என்னை அருள் நெறிப்படுத்திய அதிசங்கைக்குரிய ஷெய்குனா மிஸ்பாஹீ நாயகம் (மத்தல்லாஹு ழில்லஹுல் ஆலீ) அவர்களுக்கும், இந்நூல் சிறப்பாக வெளிவர பெரிதும் உதவிய மௌலவீ **MJ.** அஹ்மத் ஸுஹ்ரீ றப்பானீ அவர்களுக்கும் மற்றும் பண உதவி செய்த அனைத்து ஆஷிகே றஸூல்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அருளாளனே! உனது அருளைக் கொண்டும், உனது ஹபீப் ஸெய்யிதுனா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொருட்டைக் கொண்டும், உனது நபீமார்கள் வலீமார்களின் பொருட்டைக் கொண்டும் இவர்கள் அனைவர்களினதும் வாழ்நாளை பூரண ஆரோக்கியத்துடன் நீளமாக்கி வைப்பாயாக.

இன்னும் ஆபத்துக்கள் நோய்களில் இருந்தும், எதிரிகளின் கொடிய தீங்குகளில் இருந்தும் பாதுகாப்பாயாக. மேலும் உனது ஹபீப் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருக்காட்சியை ஈருலகிலும் கொடுத்தருள் புரிவாயாக. ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்!

–தொகுத்தோன்–